நாள்.13.03.2026

**அசல் வழக்கு எண்.69/2017**
**பெயர்.மதியழகன்**

**த.பெ.முருகையன்**

**வா.சா.1– 2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு தாக்கல் செய்யும் முன்பு கோட்டாட்சியரிடம் வழக்கு நடத்தினேன் என்றால் ஆமாம். அந்த வழக்கில் நான் வக்கீல் வைத்து எனது தரப்பில் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அது 2015 வது வருடம் என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் பதிலுரைதான் நான் தாக்கல் செய்தது என்றால் இருக்கலாம். ராஜம்மாள் என்னை சுவீகாரம்(தத்து) எடுத்து வளர்த்தாரா என்றால் இல்லை. நான் கோட்டாட்சியரிடம் சுவீகாரம் எடுத்து ராஜம்மாள் என்னை வளர்த்து வந்தார் என்று கட்சி செய்துவிட்டு தற்போது இந்த வழக்கில் உயில் எழுதி வைத்துள்ளார் என்று தவறாக கட்சி செய்கிறேன் என்றால் இல்லை. என் குடும்ப வகையறா வேறு யாருக்காவது என் பெயரில் உயில் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.4 RDO உத்தரவில் "***வெங்கடாசலம்–ராஜம்மாள் என்னை அவர்களுக்கு வாரிசு இல்லாத காரணத்தினால் சுவீகாரமாக எடுத்து அவர்கள் வீட்டிலேயே வளர்த்து வந்ததாக***" சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எனது வழக்குரையில் அவ்வாறு சுவீகாரம் எடுத்த விவரத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.4ல் "***ராஜம்மாள் உயில் எழுதிய விவரம் உயில் எழுதியபோதே குடும்ப மூத்த உறுப்பினர்களுக்கு தெரிந்து 25.02.2014 ம் தேதி சான்றுறுதி(notary) வழக்கறிஞர் முன்னிலையில் உயில் சாசனம் எழுதப்பட்டதாக***" குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.4 உத்தரவில் ராஜம்மாள் பெயரில் எந்த காலத்திலும் சொத்துகளுக்கு பட்டா பதிவு செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதனால் எனக்கு உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலகட்டத்தில் ராஜம்மாள் பெயரில் சொத்துகள் இல்லை என்றால் சரிதான். உயில் எழுதுவதற்கு முன்பு என் தந்தை எப்போது இறந்தார் என்றால் ஒரு 10 வருடத்திற்கு முன்பு இறந்தார். வா.சா.ஆ.1 ல் என் தந்தை இறப்பதற்கு முன்பு அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ராஜம்மாளுக்கு நான் தான் கடைசி காலத்தில் எல்லாம் செய்யவேண்டும் என்று ராஜம்மாளிடம் என் தந்தை சொன்னதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்கதெரியாது. உயில் எழுதிய தேதிக்கு முன்பு ராஜம்மாள் கணவர் வெங்கடாசலம் எப்போது இறந்தார் என்றால்

ஞாபகமில்லை. உயிலில் "குடும்ப ஆச்சாரப்படி நடைமுறை சம்பரதாயங்களை செயல்படுத்தும்படிக்கும் நான் தங்களை நியமித்து தாங்களும் ஒப்புக்கொண்டபடி தாங்கள் சம்மதித்திருப்பதால்" என்று உள்ளது என்றால் ஆமாம். உயிலில் என் பெயர் என் அப்பா பெயர் போட்டு எனக்கு எழுதிவைத்தாக வாசகம் இல்லை என்றால் சரிதான். உயிலில் கண்ட வாசகப்படி உயில் எழுதப்பட்ட தேதியில் நானும் இருந்ததாகவும் உயிலை ஒப்புக்கொண்டதாகவும் உள்ளது என்றால் இல்லை.

உயிலில் 3ம் பக்கத்தில் "***இதனை எழுதி கையெழுத்து செய்ய படிக்க தெரியாததால் கைரேகை கீழே கையொப்பம் இட்டவர்கள் முன்னிலையில் இதனை தயார் செய்து படிக்க கேட்டு கைரேகை செய்திருக்கிறேன்***" என்று உள்ளது என்றால் சரிதான். அதே உயிலில் கடைசியில் "***உறவுமுறைகளை கூட வைத்து அவர்களை கலந்து ஆலோசித்து அவர்களின் அறிவுரைப்படி கேட்டு இந்த உயிலை எழுதச்சொல்லி மனப்பூர்வ சம்மதத்துடன் இதில் சில முக்கியஸ்தர்கள் முன்னிலையில் இதில் கையொப்பன் செய்து கொடுத்திருக்கிறேன்***" என்று உள்ளது என்றால் ஆமாம். உயில் பற்றி நான் 2014 லேயே தெரிந்துகொண்டேன் என்றால் ஆமாம். உயிலை யார் எழுதினார் என்றால் எனக்கு தெரியாது. பச்சை மையில் கையெழுத்து போட்ட நோட்டரி வழக்கறிஞர் யார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நோட்டரி வழக்கறிஞர் கையெழுத்து போட்டு தேதி போடவில்லை என்றால் சரிதான். உயிலுள்ள சாட்சிகள் யார் என்று தெரியுமா என்றால் நான் விசாரித்து சுப்பிரமணியன் என்று தெரிந்துகொண்டேன்.எத்தனைபேர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் இன்னொருவர் போட்டுள்ளார் அவர் பெயர் தெரியாது. உயிலின் கடைசி பக்கத்தில் நோட்டரி வழக்கறிஞர் முத்திரைக்கு மேல்தான் சாட்சிகள் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

உயிலில் ஒரே ஒரு சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் நான் இரண்டு சாட்சி என்று பொய் சொல்கிறேன் என்றால் இன்னொருவரும் போட்டுள்ளார். உயிலை தயார் செய்தது பட்டுக்கோட்டையிலுள்ள ஒரு வக்கீல் குமாஸ்தா என்றால் எனக்கு தெரியாது. வக்கீல் குமாஸ்தாவை எனக்கு நன்கு தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. அவரை சாட்சியாக அழைப்பேனா என்றால் அழைத்து வருவேன்.சுப்பிரமணியனை கேட்டால் தெரியும். வாசா.ஆ 1 உயில் ராஜம்மாள் சுயநினைவோடு எழுதப்பட்டது இல்லை என்றால் தவறு. ராஜம்மாள் தனது கடைசி காலத்தில் சுயநினைவில்லாமல் மருத்துவமனையில் இருந்தார் என்றால் இல்லை ஆரோக்கியமாகதான்

இருந்தார். உயிலில் கடைசியில் "***உயில் சாசனத்தை பொறுத்து யாரும் ஆட்சேபனை செய்யவோ கட்சி செய்யவோ சட்டப்படி தடைபட்டிருக்கிறார்கள்***" என்று உள்ளது என்றால் சரிதான்.

**2,3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.